# கோட்டக் கார்ப்பரேட் மற்றும் டிராவல் ஏஜெண்ட் கிரெடிட் கார்டு - மிக முக்கிய விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் (MITC)

- கடன் & பணம் எடுப்பதற்கான வரம்புகள்
- கட்டணங்கள் மற்றும் விலைகள்
- பில்லிங் சிக்கல்களுக்கான தீர்வுகள்
- தவணை தவறுதல்
- கார்டு தொலைந்து போதல் / திருடு போகும் தகவலை வெளிப்படுத்துதல்
- உங்கள் பில் பேமெண்ட்களுக்கான வழிகாட்டி
- வாடிக்கையாளர் தொடர்பு மையம்
- புகார் தீர்ப்பு / புகார்கள் / புகார்களை அடுத்த உயர்நிலை மேலதிகாரிக்கு அனுப்புதல்
- கார்டுதாரர் உரிமையை முடித்து வைத்தல் / மறுப்பளித்தல்
- தவணை தவறுதல்

வங்கியால் அவ்வப்போது MITC-யில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படலாம். வங்கியின் சமீபத்திய MITC பதிப்பு மற்றும் கார்டுதாரர் ஒப்பந்தத்தினைப் பெற www.kotak.com இணையதளத்தினைக் காணவும்.

**கடன் மற்றும் பணம் எடுப்பதற்கான வரம்புகள்**

கடன் வரம்பு என்பது உங்கள் கிரெடிட் கார்டில் அதிகபட்சமாகச் செலவழிக்க அனுமதி செய்யப்பட வரம்பாகும். உங்களுக்குக் கார்டு டெலிவரி செய்யப்படும் போது கடன் மற்றும் எடுக்கும் பணத்திற்கான அளவு வரம்பு குறித்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டுவிடும் மற்றும் உங்கள் மாதாந்திரக் கணக்கு அறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டிருக்கும். பண வரம்பானது உங்கள் கடன் வரம்பின் உள்ளடக்கமாக இருக்கக் கூடும். வங்கி உங்கள் கார்டின் கணக்கினைச் சீரான கால இடைவெளியில் மீளாய்வு செய்யும் மற்றும் வங்கியின் அக வரன்முறைகளுக்கேற்ப எந்தவித முன்னறிவிப்புமின்றிக் கடன் மற்றும் பண வரம்பினைக் குறைக்கக் கூடும்.

**சேவை / வசதி விலக்கல்கள்**

கார்ப்பரேட் மற்றும் பர்சேஸ் கிரெடிட் கார்டுகளில் மீதித் தொகை பரிவர்த்தனை / நடப்பு EMI / வணிக EMI/ கூடுதல்(Add&on) கார்டு / தனிநபர் கடன் வசதி போன்ற வசதிகள் கிடையாது.


**உங்கள் பில் பேமெண்ட்களுக்கான வழிகாட்டி**

**உங்கள் கணக்கு அறிக்கை**

வங்கி ஒவ்வொரு மாதமும் பேமெண்ட் தகவல்கள் மற்றும் பரிவர்த்தனை தகவல்கள் உள்ள மாதாந்திர அறிக்கையினை அனுப்பி வைக்கும் கார்டு கணக்கில் எந்தவிதப் பரிவர்த்தனையினையும் மேற்கொள்ளாமல் இருப்பின் மற்றும் செலுத்த வேண்டிய நிலுவை ₹ 100க்கு குறைவாக இருப்பின் எந்தவித அறிக்கையும் அனுப்பப்படமாட்டாது/உருவாக்கப்படமாட்டாது. நீங்கள் வங்கியில் அளித்த மின்னஞ்சல் முகவரிக்கு மின்னணு-அறிக்கையினை வங்கி அனுப்பி வைக்கும். கார்ப்பரேட் ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஒவ்வொரு கார்டு கணக்கின் மொத்த நிலுவையையும் காண்பித்து வங்கி உங்கள் நிறுவனத்திற்கு ஒரு ஒருங்கிணைந்த அறிக்கையை அனுப்பும். அறிக்கையினைப் பெறாவிட்டாலும், கார்டுதாரர் ஒப்பந்தத்தின் கீழ் உள்ள உங்கள் பொறுப்புகள் மற்றும் கடமைகள் மீது எவ்விதத் தாக்கத்தினையும் ஏற்படுத்தாது மற்றும் கட்டணம் செலுத்த வேண்டிய தேதிக்கு முன் குறைந்தபட்சம் குறைந்தபட்சத் தொகையையாவது நீங்கள் செலுத்த வேண்டியிருக்கும்.

**பேமெண்ட்கள்**

1) **நிலைக்கட்டளை ஆவணங்கள் (ஸ்டேண்டிங் இன்ஸ்ட்ரக்ஸன்ஸ்)**
   மூலம் பணம் செலுத்துதல் (தானாகவே பணம் செலுத்துதல்) கார்டு வைத்திருப்பவர் வங்கியில் சேமிப்பு/நடப்பு கணக்கு வைத்திருந்தால் அக்கணக்கிலிருந்து நேரடியாக ஒவ்வொரு மாத நிலுவை தேதியிலும் நிலுவைத் தொகையினைத் தானாகவே எடுக்கும் பொருட்டு நிலைக்கட்டளை ஆவணங்களை எழுத்துப் பூர்வமாக அளிக்கலாம்.
2) **பிற ஏதேனும் வங்கியிலிருந்து சேமிப்பு கணக்கு வாயிலாக ஆன்லைன் பேமெண்ட்கள் செலுத்த:** உங்களின் பிற வங்கி கணக்குகள் வாயிலாக NEFT (தேசிய மின்னணு பணப் பரிவர்த்தனை) வசதி செயல்படுத்தப்பட்டிருப்பின் இணையதள வங்கி சேவையின் மூலம் மின்னணு முறையில் பணத்தைச் செலுத்தலாம்.
3) **கிளைகளில் நேரடியாகப் பணம் செலுத்துதல்:** வங்கி பணி நேரத்தில் கார்டு வைத்திருப்பவர் நேரடியாகப் பில்லினைப் பணமாகச் செலுத்தலாம்.
4) **காசோலை அல்லது வரைவோலையாக (demand draft) செலுத்துதல்:** ‘கோட்ட மஹிந்த்ரா பேங்க் கிரெடிட் கார்டு XXXX என்ற பெயரில் காசோலை அல்லது வரைவோலை எடுத்துப் பார்ட்னர் பாக்ஸில் செலுத்தலாம். டிராப் பாக்ஸ்களின் பட்டியலைக் காண www.kotak.com என்ற இணையதளத்தைக் காணுங்கள்.




விரிவான தகவல்களைப் பெற மற்றும் மேலும் கிரெடிட் கார்டு பேமெண்ட், வங்கி கிளைகளுக்கிடையேயான மொபைல் பேமெண்ட் சர்வீஸ்கள் போன்றவற்றின் பிற வழிமுறைகளை அறிந்து கொள்ள www.kotak.com என்ற இணையதளத்தைக் காணுங்கள்.

**கட்டணங்கள் மற்றும் விலைகள்**:

அனைத்துக் கட்டணங்கள் - விலைகள் அவ்வப்போது வங்கியால் சரிபார்த்து திருத்தப்படும் மாற்றங்களுக்கு உட்பட்டதாகும். கட்டணங்கள் - விலைகள் மீது ஏதேனும் மாற்றங்களை விதிப்பதற்கு 30 நாட்களுக்கு முன் வங்கி முன்னறிவிப்பினை வழங்கும். பொருந்தக் கூடிய இடங்களில், உங்களுக்குத் தகவலளித்துவிட்டுப் புதிய கட்டணம் அல்லது விலைகளை விதிக்கும் உரிமையினை வங்கி கொண்டுள்ளது.

**A. சேர்க்கை கட்டணம் மற்றும் வருடாந்திர கட்டணம்:**

| கோட்டக் மஹிந்த்ரா பேங்க் கார்டு வகை | சேர்க்கை கட்டணங்கள் | வருடாந்திர கட்டணங்கள் |
|---|---|---|
| டிராவல் ஏஜென்ட் கிரெடிட் கார்டு | எதுவுமில்லை | ₹999* |
| பேசிக் கார்ப்போரேட் கிரெடிட் கார்டு | எதுவுமில்லை | எதுவுமில்லை |
| கிளாசிக் கார்ப்போரேட் கிரெடிட் கார்டு | எதுவுமில்லை | ₹1000* |
| ப்ரைவி லீக் பிளாட்டினம் கார்ப்போரேட் கிரெடிட் கார்டு | எதுவுமில்லை | எதுவுமில்லை |
| கார்ப்போரேட் பிளாட்டினம் கிரெடிட் கார்டு | எதுவுமில்லை | ₹999* |
| கார்ப்போரேட் வெல் சிக்னேச்சர் கிரெடிட் கார்டு | எதுவுமில்லை | எதுவுமில்லை |
| பர்சேஸ் கார்டு | எதுவுமில்லை | எதுவுமில்லை |

**B. நிதி அளிப்புக் கட்டணங்கள்:**

| கோட்ட மஹிந்த்ரா பேங்க் கார்டு வகை | வட்டி கட்டணங்கள் | | ATM பணம் எடுத்தல் 10,000 க்கு ஒரு வரைவு / நிதி பரிமாற்றப் பண அல்லது அதன் ஒரு பகுதி | |
|---|---|---|---|---|
| | மாதாந்திர வீதம் | வருடாந்திர வீதம் (APR) | பணம் எடுப்பதற்கான கட்டணம் | வருடாந்திர வீதம் (APR) |
| டிராவல் ஏஜென்ட் கிரெடிட் கார்டு | 1.49% | 17.88% | NA | NA |
| பேசிக் கார்ப்போரேட் கிரெடிட் கார்டு | 3.30% | 39.60% | NA | NA |
| கிளாசிக் கார்ப்போரேட் கிரெடிட் கார்டு | 3.30% | 39.60% | NA | NA |
| ப்ரைவி லீக் பிளாட்டினம் கார்ப்போரேட் கிரெடிட் கார்டு | 3.10% | 37.20% | NA | NA |
| கார்ப்போரேட் வெல் சிக்னேச்சர் கிரெடிட் கார்டு | 3.10% | 37.20% | NA | NA |
| கார்ப்போரேட் பிளாட்டினம் கிரெடிட் கார்டு | 3.30% | 39.60% | NA | NA |
| பர்சேஸ் கார்டு | 3.30% | 39.60% | NA | NA |

**C. மற்ற கட்டணங்கள்:**

| | | |
|---|---|---|
| தாமதப் பேமெண்ட் கட்டணங்கள் ("LPC") | கடைசி அறிக்கையின் படி நிலுவை | LPC கட்டணங்கள் |
| | ₹ 100 - 500 | ₹ 100 |
| | ₹ 500.01 - 5000 | ₹ 500 |
| | ₹ 5000.01 - 10000 | ₹ 500 |
| | ₹ 10000+ | ₹ 700 |
| குறைந்தபட்ச நிலுவை தொகை ("MAD") | 20% | |
| மிகை வரம்பு கட்டணங்கள் | எதுவுமில்லை | |
| திருப்பியளிக்கப்படக் கூடிய காசோலை | ₹ 500* (பொருந்தும் விலைகளுக்கேற்ப) | |
| அந்நிய நாட்டுப் பரிவர்த்தனை மார்க் அப் | 3.50%* | |
| இரயில்வே புக்கிங் மேற்கட்டணம் (பொருந்தும் விலைகளுக்கேற்ப)** | பொருந்து கூடியது - டிராவல் ஏஜென்ட், கார்ப்போரேட் பேசி மற்றும் கார்ப்போரேட் கிளாசிக் | |
| | தள்ளுபடி செய்யப்பட்டது - ப்ரைவி லீக் பிளாட்டினம் / கோட்ட வெல் சிக்னேச்சர் கார்டு / கார்ப்போரேட் பிளாட்டினம் / பர்சேஸ் கார்டு | |
| எரிபொருள் மேல் கட்டணம் பரிவர்த்தனை தொகை மீது (குறைந்தபட்சம் ₹10-ற்கு உட்பட்டது)*** (பொருந்தும் விலைகளுக்கேற்ப) | பொருந்தக் கூடியது - பேசிக் கார்ப்போரேட் | |
| | தள்ளுபடியானது - டிராவல் ஏஜென்ட், கார்ப்போரேட் கிளாசிக் ப்ரைவி லீக் பிளாட்டினம் / கோட்ட வெல் சிக்னேச்சர் கார்டு / கார்ப்போரேட் பிளாட்டினம் / பர்சேஸ் கார்டு | |

| | |
|---|---|
| பணமாக கிளையில் கட்டணம் | ₹ 100* |
| கூடுதல் கார்டு கட்டணங்கள் | எதுவுமில்லை |
| அன்றாட பயன்பாட்டு பில்கள் மீதான பரிவர்த்தனை கட்டணங்கள் மற்றும் விசா^ போன்றவற்றால் விவரிக்கப்பட்டிருக்கக் கூடிய இன்சூரன்ஸ் பேமெண்ட்கள் | தண்ணீர்/மின்சாரம்/குழாய் வழி கேஸ் பில்கள் - 1.1%<br>இன்சூரன்ஸ் 1.1%<br>தபால் அலுவலகம்/கல்வி/சூப்பர் மார்க்கெட் -0.7% |
| வெப் பே சர்வீஸ் கட்டணம் | தள்ளுபடி செய்யப்பட்டது (10 ஜனவரி 2014 முதல் அமலில் உள்ளது) |
| கார்டு மாற்றி தருவதற்கான கட்டணம் (தொலைந்த & பாதிப்படைந்த கார்டுகள்) | தள்ளுபடி செய்யப்பட்டது |
| கடன் தகவல் அறிக்கை (CIBIL) நகலை பெறுவதற்கான கட்டணங்கள் விண்ணப்பதாரருக்கான | ₹ 50* ஒவ்வொரு முறையும் |
| பில் பே (அன்றாட பயன்பாட்டு பேமெண்ட்கள்) | 0.8% of the Utility Payments |

*அரசாங்க வரிகள் (சேவை வரி, ஜிஎஸ்டி உபட, அவ்வப்போது தேவையென கருதப்படும்/அனைத்து பொருந்தும் வரிகள்) பொருந்தும் அனைத்து வட்டிகள், கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் கிரெடிட் கார்டு மீது கட்டணமாக விதிக்கப்படும். **நிலை கட்டளை ஆவணங்கள் (ஆட்டோ டெபிட், NACH & ECS) **ஒரு வருடத்தில் அதிகபட்சமாக Rs.500 கூடுதல் கட்டண தள்ளுபடியாக இருக்கும். *** ₹500 -₹ 3,000 மதிப்புகளுக்கு இடையிலான பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே எரிபொருள் கூடுதல் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும். ஒரு நாட்காட்டி ஆண்டில் அதிகபட்ச எரிபொருள் கூடுதல் தள்ளுபடி கட்டணம் ₹3,500 ரூபாய்

^ அன்றாட பயன்பாட்டு பில் பேமெண்ட்களில் பரிவர்த்தனை கட்டண கணக்கீடு குறித்த விளக்கம்

அறிக்கை தேதி - 1 டிசம்பர்

பேமெண்ட் நிலுவை தேதி - 19 டிசம்பர்

மின்சார பயன்பாட்டு கட்டணமாக ₹ 2,000 நவம்பர் மாதம் 16 தேதி மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனை 20 நவம்பர் அன்று 3000 ரூபாய் இன்சூரன்ஸ் மற்றும் மளிகை கடைக்கு ₹ 5,000 மற்றும் 25 நவம்பர் அன்று 10000 தொலைபேசி கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது

**கட்டணமாக பெறப்படும் பரிவர்த்தனை கட்டணங்களாவன:**

| பரிவர்த்தனையின் தேதி | பதிந்த தேதி | விவரம் | நாட்கள் வரை இல்லை | கட்டணமாக பெறப்படும் பரிவர்த்தனை கட்டணங்களாவன: |
|---|---|---|---|---|
| 16 நவம்பர் | 16 நவம்பர் | அன்றாட வீட்டு பயன்பாட்டு பில் | 33 நாட்கள் (16 நவம்பர் - 19 டிசம்பர்) | (33*0.04%*2000) = ₹ 26.40 |
| 20 நவம்பர் | 20 நவம்பர் | அன்றாட வீட்டு பயன்பாட்டு பில் | 29 நாட்கள் (20 நவம்பர் - 19 டிசம்பர்) | (29*0.036%*3000) = ₹ 31.32 |
| TAD = 2000 + 24.20 + 3000 + 31.32 + 5000 + 10000 = 20057.72 | | | | |

*பரிவர்த்தனை செய்த தேதி அன்றே அனைத்து பரிவர்த்தனைகளும் சமர்ப்பிக்கப்பட்டு விட்டதாக கருதப்பட்டுள்ளது

**வட்டியில்லா காலம்:**

பில்லிங் சுழற்சி தேதியின் தொடக்கத்திலிருந்து வட்டி இல்லாத காலம் 48 நாட்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். 5 மே 2014 முதல் அமலில் உள்ளது: உங்கள் கார்டில் பணம் செலுத்த வேண்டிய நிலுவை தேதி, அறிக்கை தேதிக்கு 18 முதல் 21 நாட்களுக்குள் இருக்கலாம் (தயவுசெய்து உங்கள் சரியான கட்டணம் செலுத்த வேண்டிய நிலுவை தேதிக்கு உங்கள் அறிக்கையை சரிபார்க்கவும்). எனவே உங்கள் கடன் செலுத்தும் நிலுவை தேதியைப் பொறுத்து இலவச கடன் காலம் 18-48 நாட்கள் முதல் 21-51 நாட்கள் வரை இருக்கலாம்.

**வட்டியில்லா காலத்தினை கணக்கிடுவதற்கான விரிவான விளக்க உதாரணம்:**

ஏப்ரல் 11 முதல் மே 10 வரையிலான காலத்திற்கான அறிக்கைக்கு பணம் செலுத்த வேண்டிய நிலுவை தேதி மே 28 ஆகும். உங்கள் முந்தைய மாத நிலுவைத் தொகையை நீங்கள் முழுமையாக செலுத்தியுள்ளீர்கள் என்று கருதினால், சலுகை காலமானது:

ஏப்ரல் 12 தேதியிட்ட கொள்முதல்களுக்கு, வட்டி இல்லாத சலுகை காலம் ஏப்ரல் 12 முதல் மே 28 வரை = 48 நாட்கள் மற்றும் மே 2 தேதியிடப்பட்ட கொள்முதல்களுக்கு வட்டி இல்லாத சலுகை காலம் 2 மே முதல் மே 28 வரை = 27 நாட்கள் ஆகும்

இருப்பினும், முந்தைய மாத நிலுவைத் தொகையை நீங்கள் நிலுவை தேதிக்கு முன்பே செலுத்தவில்லையெனில், வட்டி இல்லாத காலம் இருக்காது.

**நிதிக் கட்டணங்கள் (வட்டி கட்டணங்கள்)** வட்டியினை முந்தைய பில் தொகையை நீங்கள் நிலுவை தேதியில் அல்லது அதற்கு முன்னர் முழுமையாக செலுத்தவில்லை என்றால், தினசரி வட்டி சேர்ப்பு அடிப்படையில் வட்டி உங்களிடம் வசூலிக்கப்படும்; பரிவர்த்தனை தேதி முதல் திருப்பி செலுத்திய தேதி வரை வட்டி கட்டணமாக பெறப்படும். டிராவல் ஏஜென்ட் கிரெடிட் கார்டுக்கு (18% வருடாந்திரம்) மாதத்திற்கு 49 1.49% பரிவர்த்தனை செய்யப்பட்ட தேதி முதல் திருப்பி செலுத்திய தேதி வரை ரொக்க முன்பணத்தின் மீது வட்டி வசூலிக்கப்படும். முழு கட்டணமும் நிலுவை தேதிக்குப் பிறகு ஆனால் அடுத்த அறிக்கை தேதிக்கு முன்னர் பெறப்பட்டால் வட்டி வசூலிக்கப்படும். நீங்கள் ஒரு பகுதியளவு பணம் செலுத்தியிருந்தால், ஆனால் தற்போதைய அறிக்கையின் நிலுவைத் தொகையை முழுமையாக செலுத்த வேண்டிய நிலுவை தேதிக்கு முன்பாகவோ அல்லது செலுத்த வேண்டிய தேதியிலோ செலுத்தியிருந்தால், முழு தொகையும் திருப்பிச் செலுத்தப்பட்ட தேதி வரை நடப்பு அறிக்கையின் மொத்த நிலுவை தொகை மீது வட்டி வசூலிக்கப்படும். அவ்வாறு பெறப்படும் வட்டி தொகையானது அடுத்து வரும் அறிக்கையில் கணக்கு வைக்கப்படும் உதாரணம்: 20 ஜூன் அன்று அறிக்கையின் மீதித் தொகை ₹ 5,000. திருப்பி செலுத்த வேண்டிய நிலுவை தேதி 20 ஜூலை. 1 ஜூலை அன்று ₹ 5,000 செலுத்தப்படுகிறது ₹ 5,000 மீது 10 நாட்கள் வட்டி 20 ஜூலை அறிக்கையில் கணக்கு வைக்கப்படும் அன்றாட பயன்பாட்டு பில்கள் அல்லது இன்சூரன்ஸ் பேமெண்ட்கள் போன்ற ஏதேனும் பரிவர்த்தனை இருந்தால், அதற்கான பொருந்தக்கூடிய பரிவர்த்தனைக் கட்டணமும் சேர்க்கப்படும்.

**வட்டி கணக்கீட்டிற்கான எடுத்துக்காட்டு** மார்ச் 15 ஆம் தேதி பொருட்கள் வாங்கியதற்கு ₹10,000 நிலுவைத் தொகை உங்களுக்கு

ஏற்பட்டுள்ளதாக வைத்துக் கொள்ளுங்கள். மார்ச் 31 ஆம் தேதி உருவாக்கப்பட்ட அறிக்கை ₹ 10,000 நிலுவைத் தொகையைக் காண்பிக்கும். ஏப்ரல் 10 ஆம் தேதி நீங்கள் ₹4,000 ரூபாய் செலுத்துகிறீர்கள். ஏப்ரல் 15 ஆம் தேதி அன்று ₹2,000 மதிப்பிற்கு பொருட்கள் வாங்குகிறீர்கள். ஏப்ரல் 30 வரை எந்த வித கிரெடி கார்டு கட்டணத்தையும் செய்யாமல் உள்ளீர்கள். இந்நிலையில் வட்டி பின்வருமாறு விதிக்கப்படலாம்:

தினசரி வட்டி வீதம் = (1.49%)*12/365 = 0.049%.

| |
|---|
| 17 நாட்களுக்கு (15 மார்ச் - 31 மார்ச்) மீதித் தொகை ₹10,000 மீது = 10000*0.1085%*17= ₹184.45 |
| 9 நாட்களுக்கு (1 ஏப்ரல் - 9 ஏப்ரல்) மீதித் தொகை ₹10,000 மீது = 10000*0.1085%*9 = ₹97.65 |
| 5 நாட்களுக்கு (10 ஏப்ரல் - 14 ஏப்ரல்) மீதித் தொகை ₹6,000 மீது = 6000*0.1085%*5 = ₹14.7 |
| 16 நாட்களுக்கு (15 ஏப்ரல் - 30 ஏப்ரல்) மீதித் தொகை ₹8,000 மீது = 8000*0.1085%*16 = ₹138.88 |
| மொத்தமாக பெறப்படும் வட்டி = ₹453.5; மொத்த நிலுவை தொகை = ₹8453.5 |

மேற்காட்டப்பட்டுள்ள எடுத்துக்காட்டில், மொத்த நிலுவைத் தொகை ₹8,453.5 மதிப்பில் 30 ஏப்ரல் அன்று அறிக்கையாக உருவாக்கப்படும். ₹ 8,453.5 தொகையினை 15 மே அன்று செலுத்தி விட்டு மே மாதத்தில் எந்தவித பொருட்களும் கிரெடிட் கார்டில் வாங்காமல் உள்ளீர்கள். மே 31 அன்று உருவாக்கப்படும் அடுத்த அறிக்கையில் ₹128.4 வட்டியாக வசூலிக்கப்படும். (மீதித் தொகை ₹ 8,453.5 மீது 14 நாட்களுக்கு (1 மே - 14 மே) - = 8453.5*0.1085%*14=128.4).

மேற்காட்டிய எடுத்துக்காட்டில் எந்தவித அரசாங்க வரிகளும் சேர்க்கப்படவில்லை (சேவை வரி, ஜிஎஸ்டி, அவ்வப்போது பொருந்தும்/அனைத்து வரிகள்) மாதத்திற்கு 1.49% வட்டி அளவில் மேற்கண்ட எடுத்துக்காட்டு விவரிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு:** ₹ 5,000 செலுவளிக்கிறீர்கள் என்றால் நீங்கள் துல்லியமாக குறைந்தபட்ச நிலுவை தொகையினை ஒவ்வொரு மாதமும் திருப்பிச் செலுத்துவீர்கள் இதன் மூலம் திருப்பி செலுத்தும் காலம் 5 வருடம் வரை நீண்டு செல்வதோடு நிலுவைத்தொகை மீது அடுத்தடுத்து வட்டியும் விதிக்கப்பட்டு கூடிக் கொண்டே செல்ல நேரிடும். எனவேதான் உங்களிடம் போதுமான பணம் கையிருப்பு உள்ளபோதே மாதாந்திர குறைந்த பட்ச நிலுவைத் தொகைக்கு மேல் கூடுதல் தொகையினை சேர்த்தி வங்கியில் திருப்பிச் செலுத்த பரிந்துரைக்கப்படுகிறது. நிலுவை தேதிக்கு பின்னரும் மாத்ந்திரம் செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தொகையினை செலுத்தாமல் போனால் தாமதமாக செலுத்துவதற்கான தாமத அபராத கட்டணம் சேர்த்தி செலுத்த நேரிடும்.

**பண தள்ளுபடி திட்டம்:**

கோட்டக் வங்கியின் ப்ரத்யேக விருப்பத்தின் அடிப்படையில் பண தள்ளுபடி திட்டம் டிராவல் ஏஜென்ட் கிரெடிட் கார்டு வைத்திருப்பவர்களுக்கு கிடைக்க செய்யப்படலாம் மற்றும் இது ஒவ்வொரு கார்டுக்கும் மாறுபடக் கூடும். திட்டம் மற்றும்/அல்லது பண தள்ளுபடி (வரம்பில்லா வடிவம் மற்றும் பண தள்ளுபடியினை வெளியிடும் முறை உட்பட) குறித்து அவ்வப்போது கார்டு வைத்திருப்பவருக்கு கோட்டக் வங்கியால் தெரிவிக்கப்படும்.

**அடிப்படை பண தள்ளுபடியின் தன்னிச்சை திரள்:**

அனைத்து டிராவல் ஏஜென்ட் கார்டுகளும் முன்பே தொடர்பு கொண்டு தெரிவித்தப்படி அடிப்படை ரொக்க-தள்ளுபடி பெறுவது நிறுத்தப்பட்டு விடும், இது 1 ஜனவரி 2019 முதல் அமலில் உள்ளது.

**டிராவல் ஏஜென்ட் கார்டுகள் மீது பண-தள்ளுபடி பெற பொதுவான விதிமுறைகள் & கட்டுப்பாடுகள்**

இணைக்கப்பட்டுள்ள அனைத்து கிரெடிட் கார்டு மற்றும் கார்டு(கள்) நல்ல நிலுவை கடன் கணக்கில் பராமரிக்கப்பட்டு வர வேண்டும் அதாவது தவணை தவறும் கணக்காக இருக்கக் கூடாது கோட்டாக் வங்கி அல்லது கார்டு வைத்திருப்பவரால் ரத்து செய்யப்பட்டதாக அல்லது இடைநிறுத்தப்பட்டதாக இருக்கக் கூடாது மற்றும் பண தள்ளுபடி வெளியீட்டின் போது மோசடி/இழப்பு/திருட்டு/ஒதுக்கப்பட்ட கிரெடிட் வரம்பினை மீறிய பயன்பாடு போன்றவற்றால் தற்காலிகமாக கார்டினை உபயோகிப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கக் கூடாது. கார்டு கணக்கு முறைப்படுத்தப்படுவதில், தகுதியான பண-தள்ளுபடி கோட்டக் வங்கியின் விருப்பத்தின் பெயரில் வெளியிடப்படலாம்.

- பண தள்ளுபடி திட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த செலவினங்களின் வகைப்பாடுகள் கோட்டக் வங்கியின் முழு விருப்பத்தின் பெயரில் இருக்கும், மேலும் இது எந்தவித முன்னறிவிப்பின்றி மாற்றப்படலாம்.
- நடைமுறையில் உள்ள பண தள்ளுபடி வரைகூறுகளின்படி கார்டுதாரர் பொருந்தக்கூடிய தகுதிகளை பூர்த்தி செய்யவில்லை என்றால், பண தள்ளுபடிக்கான கோரிக்கை ரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.
- கோட்டக் வங்கியின் பண தள்ளுபடி கணக்கீடே இறுதி முடிவானது மற்றும் கார்டுதாரர்களும் இதற்கு கட்டுபட்டவர்களாவர் மற்றும் கார்டு வைத்திருப்பவர்கள் சர்ச்சைகளை எழுப்பவோ அல்லது கேள்விகள் கேட்பதற்கோ எந்தவித உரிமையும் கிடையாது மற்றும் கோட்டக் வங்கியின் முடிவிற்கு அனைத்து வாடிக்கையாளர்களும் கட்டுப்பட்டவர்களாக இருப்பர்.
- இந்த திட்டமானது மாற்றவியலாதது அதாவது கார்டு வைத்திருப்பவர் பண தள்ளுபடியினை பிற நபருக்கோ அல்லது இதனை தன் மற்ற கார்டுகளுடன் சேர்த்து/இணைத்து சலுகையினை பெறவோ முடியாது.
- எந்தவித முன்னறிவிப்புமின்றி இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தையும் சேர்க்கவோ, மாற்றவோ அல்லது திருத்தவோ அல்லது இந்த திட்டத்தை முழுவதுமாக திரும்பப் பெறவோ, எல்லா நேரத்திலும் ப்ரத்தியேக முழு உரிமையை கோட்டக் வங்கி கொண்டுள்ளது.
- இந்த திட்டம் தொடர்பாக ஏதேனும் சச்சரவுகள் இருப்பின் அது கோட்டக் வங்கிக்கு எதிரான உரிமை கோரலாக இருக்காது.
- வாடிக்கையாளர் அத்தகைய ஏதேனும் அத்தகைய சச்சரவுகளுக்கு தீர்வு கோருவதை கோட்டக் வங்கி ஊக்குவிப்பத்திலை.
- இந்த விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் கீழ் இந்த தள்ளுபடி திட்டத்தில் உள்ள எதுவும் கோட்டக் வங்கி அதன் எந்தவொரு உரிமைகளையும் தள்ளுபடி செய்ததாக (வட்டி கட்டணங்களை வசூலித்தல் உட்பட) எடுத்துக் கொள்ளப்படாது.

வாடிக்கையாளர் தொடர்பு மையம்

எங்களுடன் தொடர்பு கொள்ளும் அனைத்து நேரத்திலும், 16-இலக்க கோட்டக் கிரெடிட் கார்டு எண்ணினை குறிக்கவும். பின்வரும் ஏதேனும் ஒரு வழியில் நீங்கள் வங்கியினை தொடர்பு கொள்ளலாம்.

(a) எங்கள் 24 மணி நேர வாடிக்கையாளர் சேவை மையத்திற்கு-**1860 266 2666** அழைக்கலாம் அல்லது www.kotak.com இணையதளத்தில் உள்ள பட்டியிலடப்பட்ட எண்களுக்கும் தொடர்பு கொள்ளலாம். (b) **www.kotak.com** தளத்தில் உள் நுழைந்து மின்னஞ்சல் செய்யலாம் அல்லது வங்கி கணக்கின் இணையதளம் வாயிலாக தொடர்பு கொள்ளலாம் (c) சேவை மேலாளர் வாயிலாக கூரியர் அனுப்புதல், (d) அன்றாட தபால் சேவை: கோட்டக் மஹிந்த்ரா பேங்க் லிமிடெட். கோட்டக் கிரெடிட் கார்டுகள், த.பெ எண்.27703, மலாட் (கிழக்கு), மும்பை - 400097, இந்தியா.

**பில்லிங் சிக்கல்களுக்கான தீர்வுகள்**

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களை கார்டு வைத்திருப்பவர் ஒப்புக் கொள்ளவில்லை எனில், அறிக்கை பெற்ற 60 (அறுபது) நாட்களுக்குள் எழுத்துப் பூர்வமாக கோட்டக் மஹிந்த்ரா வங்கிக்கு தகவல் அனுப்பப்பட வேண்டும் மற்றும் அவ்வாறு அனுப்பவில்லை எனில் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கட்டணங்களும் ஏற்கப்பட்டதாக கருதப்படும். சர்வதேச பரிவர்த்தனை தொடர்பாக ஏதேனும் சச்சரவுகள் இருப்பின், உங்கள் பாஸ்போர்ட்டின் நகலினை எங்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். கார்டுதாரர் கிரெடிட் கார்டில் அதிகப்படியான தொகை செலுத்தி விட்டால், அத்தொகை கிரெடி கார்டு கணக்கில் திருப்பி வரவு வைக்கப்படும். கிரெடிட் கார்டு ரத்து செய்யப்பட்டுவிட்டால், அதிகப்படியாக உள்ள நிலுவைகள் வாடிக்கையாளரின் சேமிப்பு கணக்கில் செலுத்தப்பட்டுவிடும்.

**புகார் தீர்ப்பு / புகார்கள் / புகார்களை அடுத்த உயர்நிலை மேலாதிகாரிக்கு அனுப்புதல்**

நீங்கள் எங்கள் சேவைகளால் திருப்தியடையாத நிகழ்வின் போது, உங்கள் புகார்களை அளிக்கலாம் (i) www.kotak.com தளத்தில் 'புகார் படிவம்' நிரப்பலாம் (ii) எங்கள் வாடிக்கையாளர் சேவை மையத்தினை தொடர்பு கொள்ளுதல் (iii) சேவை மேலாளருக்கு மின்னஞ்சல் செய்தல் - சேவை செயல்பாடுகள் (iv) மேற்படி அடுத்த நிலை அதிகாரிகளுக்கு புகாரினை கிரெடிட் கார்டு பிரிவின் நோடல் அலுவலருக்கு nodalofficercards@kotak.co என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யலாம் வங்கி 30 நாட்களுக்குள் புகாருக்கு தீர்வளிக்கவில்லை எனில் புகாரானது வங்கிகள் குறைதீர்ப்பாயத்திற்கு அனுப்பப்பட்டுவிடும். வங்கிகள் தீர்ப்பாயத்தின் இருப்பிடம் குறித்த தகவல்கள் உங்கள் கிளைகளில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும்.

**தவணை தவறுதல்**

கார்டுதாரர் குறைந்தபட்சம் குறைந்தபட்ச நிலுவை தொகையினை செலுத்தாவிட்டால், ஒவ்வொரு அடுத்தடுத்த மாத அறிக்கையிலும் கார்டுதாரர்(கள்) அவர்களின் நிலுவை தொகையினை செலுத்த நினைவூட்டப்படுவார்கள். 6 மாதங்களுக்கு மேல் நிலுவைத் தொகை மீதி வைக்கப்பட்டிருப்பின் கார்டு வைத்திருப்பவர் 'தெரிந்தே தவணை செலுத்தாமல் இருப்பவர்' எனத் தெரிவிக்கப்பட்டுவிடுவார். தவணை தவறும் பட்சத்தில், அதனை தபால், ஃபேக்ஸ் மற்றும் தொலைபேசி வழியே தொடர்பு கொண்டு பேசுதல், மின்னஞ்சல், SMS வழியாக தகவலளித்து பின் தொடர்வர் மற்றும் மூன்றாம் தரப்பினர் மூலம் நிலுவைகள் திரட்டப்படலாம் மற்றும் பின் தொடரப்படலாம். அவ்வாறு நியமிக்கப்படும் வங்கி மற்றும் மூன்றாம் தரப்பினர் வங்கியின் நியாயமான நடைமுறை கோட்பாட்டிற்கிணங்கி கிரெடிட் கார்டு செயல்பாடுகள் மற்றும் நிலுவைகள் வாங்குதல் மற்றும் அவ்வப்போது திருத்தப்படும் பாதுகாப்பு கொள்கை மீட்பினை மேற்கொண்டு செயல்படுவார்கள். தவணை தவறியதாக புகரளிக்கப்படும் சிக்கல்களை திரும்பப் பெற வங்கிக்கு உரிமை உள்ள நிலைகள்:

- கேள்வி கேட்கப்படும் இடத்தில் உள்ள தவணை தவறியவர் ஒட்டுமொத்த நிலுவை தொகையினையும் வங்கியில் கட்டி முடித்து விட்டார் அல்லது நிலுவைகளை வங்கியில் கட்டி முடித்துவிட்டார்
- வங்கியால் அல்லது அதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட சட்ட வழக்கில் வங்கிக்கு எதிரான கார்டுதாரர் பட்டியலிலிருந்து விலக்குமாறு பெறப்பட்ட நீதிமன்ற ஆணை / தீர்ப்பு. தனிநபர் அடிப்படையிலான பகுப்பாய்வின்படி ஒவொவ்ரு நிலைக்கேற்றவாறு முடிவுகள் எடுக்கப்படலாம்.
- மேலே கொடுக்கப்பட்டுள்ள சூழல்களில் கார்டு வைத்திருப்பவர்கள் பதிவு தகவல் கடன் தீர்ப்பாயத்திற்காக புதுப்பிக்கப்பட்டு வழங்கப்படும் பட்டியலில் 'நடப்பு' எனத் திருத்தப்பட்டு வழங்கப்படும்.
- கார்டு வைத்திருப்பவர் நிரந்தரமாக ஊனமடைதல் அல்லது இறப்பு நேரும் நிலையில், சட்டம் மற்றும் ஈக்விட்டி ஆகியவற்றின் கீழ் கிடைக்கக்கூடிய அனைத்து சாத்தியங்களையும் அதன் விருப்பப்படி தொடரவும், பொருந்தக்கூடிய எந்தவொரு காப்பீட்டுத் தொகையிலிருந்தும் அல்லது வாரிசுகள் / ஆவண ஒப்புதல் அளித்தவர்கள் / நிர்வாகிகளிடமிருந்து நிலுவையில் உள்ள கார்டை மீட்டெடுப்பது உட்பட நிலுவையில் உள்ள எந்த கார்டு கணக்கையும் (களை) மீட்டெடுப்பதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

**கார்டுதாரர் உரிமையை முடித்து வைத்தல் / மறுப்பளித்தல்**

கார்டு வைத்திருப்பவர் எழுத்துப் பூர்வ கோரிக்கை அல்லது வங்கியின் வாடிக்கையாளர் தொடர்பு மையத்திற்கு அழைத்து கிரெடிட் கார்டு வசதியினை முடித்து வைக்க கோரலாம் மற்றும் கோரிக்கை உறுதி செய்யப்பட்டவுடன் கார்டை குறுக்காக வெட்டி இரு துண்டு களாகக்கி விட வேண்டும் உங்கள் அனைத்து நிலுவை தொகைகளும் உடனடியாக நிலுவையாக மாறிவிடும்.150 நாட்களுக்கு மேல் பயன்படுத்தப்படாத கார்டுகள் தற்காலிகமாக பாதுகாப்பு காரணங்களுக்காக முடக்கி வைக்கப்பட்டு விடும். எந்தவித முன்னறிவிப்புமின்றி எந்தவொரு நேரத்திலும் பாதுகாப்பு காரணங்கள் அல்லது வணிக ரீதியாக தேவை என நம்பக் கூடிய சூழல்களில், கடனை தாமதமாக திருப்பி செலுத்துதல், கடன் வரம்பினை மீறுதல் அல்லது காசோலைகள் செல்லுபடியாகாமல் திரும்பி விடுதல் போன்ற சூழல்களில் கோட்டக் மஹிந்த்ரா பேங்க் கார்டினை ரத்து செய்யலாம்.

**கார்டு தொலைந்து போகுதல் / திருடு போகுதல்**

கார்டு தொலைந்து போனால் கார்டு வைத்திருந்தவர் வாடிக்கையாளர் தொடர்பு மையத்தினை தொடர்பு கொண்டு உடனடியாக தெரிவிக்கலாம். கார்டின் தவறான பயன்பாட்டை தவிர்க்கும் பொருட்டு கார்டு வைத்திருப்பவரின் கோரிக்கையின் பெயரில் வங்கி அதனை செயலிழக்க செய்யலாம். உள்ளூர் காவல்துறையிடம் கார்டு வைத்திருப்பவர் முதல் தகவல் அறிக்கையினை ("FIR") அளிக்க வேண்டும் எவரேனும் கார்டு/PIN எண்ணை கார்டு வைத்திருப்பவரின் ஒப்புதலை பெற்றோ/பெறாமலோ எடுத்து தவறாக பயன்படுத்துதல் அல்லது கார்டு வைத்திருப்பவர் மோசடி செய்தல் அல்லது போதுமான கவனத்துடன் செயல்படாமல் இருத்தல் போன்றவற்றிற்கு கார்டின் உரிமையாளரே முழு பொறுப்பாவார். கார்டு வைத்திருப்பவர் கவனக் குறைவுடன் செயல்பட்டதை தவிர கார்டு வைத்திருப்பவர் கார்டு தொலைந்தது பற்றி கோட்டக் மஹிந்த்ரா வங்கிக்கு தெரிவித்த பின்னர் நிகழும் மோசடிகளுக்கு கார்டு உரிமையாளர் பொறுப்பாக மாட்டார்.

**வெளிப்படுத்துதல்**

தற்போதுள்ள வணிக நடைமுறைகளின்படி, கிரெடிட் கார்டு (கள்) தொடர்பான எந்தவொரு தகவலையும், எந்தவொரு கடன் வாரியாத்திற்கும் (நடப்பு அல்லது எதிர்காலம்) வாடிக்கையாளருக்கு எந்த அறிவிப்பும் இல்லாமல் அவ்வப்போது வெளியிட வங்கி அதிகாரம் கொண்டுள்ளது என்பதை கார்டுதாரர் ஒப்புக்கொள்கிறார். கிரெடிட் இன்ஃபர்மேஷன் பியூரியா இந்தியா லிமிடெட் (CIBIL) மற்றும் மற்ற கடன் வாரியங்கள் போன்ற நிறுவனங்கள் நிதி அமைப்பின் நிலைத்தன்மை மற்றும் செயல்பாட்டினை முன்னேற்ற இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி எடுத்துள்ள முன்னெடுப்பாகும் காலதாமத கார்டு கணக்குகளுக்கு பணம் பெறப்பட்டதில் தரவைப் புதுப்பித்தல் / சரிசெய்தல் ஆகியவை சிபில் / பிற கடன் வாரிய தரவுகளில் வங்கியால் பணம் பெறப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் பிரதிபலிக்கும். வங்கி அதன் சுய விருப்பத்தின் பெயரில், கார்டு வைத்திருப்பவருக்கும் வங்கியின் பிரதிநிதிக்குமிடையேயான உரையாடலை பதிவு செய்யலாம் அதாவது புகார்-தொடர்பான உரையாடல் அல்லது செலுத்திய தொகையினை மீட்டெடுப்பது தொடர்பான உரையாடல்கள் அல்லது வங்கி பொருந்தும் எனக் கருதும் பிற உரையாடல்கள் பதிவு செய்யப்படலாம் என கார்டு உரிமையாளருக்கு தெரிவித்து கொள்ள விரும்புகிறோம்.

CORP/30/03/2020